**சமுர்த்தி தேசிய சமூக அபிவிருத்தி நிதியம் - 2024**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

சமுர்த்தி தேசிய சமூக அபிவிருத்தி நிதியத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் பொருண்மையான கணக்கீட்டு கொள்கைகளுக்குரிய நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்களை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும், 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினது ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தாக்கங்கள் நீங்கலாக, நிதியத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பு ஒன்றாக காணப்பட்டதுடன், மற்றும் முகாமைத்துவமானது நிதியத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் அடிப்படையின் மீது கணக்கீடு செய்தல் மற்றும் நிதியம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துதலும் முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம் இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- நிதியத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கூட்டுத்தாபனத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். அத்துடன் அந்த வெளிப்படுத்தல்கள் போதியளவினதாக காணப்படாவிடின் எனது அபிப்பிராயத்தை

மாற்றியமைக்க வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் மீது தொடர்ந்தியங்கும் நிலைமை முடிவடையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நிதியத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- நிதியத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் நிதியம் இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

கொடுக்கல் வாங்கல்களின் முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் திட்டவட்டமான அதிகாரத்துடன் நடைமுறைப்படுத்தல், உரிய நிதியிடல் நியமங்களுக்கிணங்க நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்தல் மற்றும் சொத்துக்களுக்கான கணக்கறிக்கையை பேணுதல், முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் குறிப்பான அதிகாரத்துடன் மாத்திரம் சொத்துக்களுக்கு பிரவேசித்தல், பதிவு செய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணகளித்தகைமை பேணப்பட்டு சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியினுள் ஒப்பிடல் மற்றும் வேறுபாடுகள் காணப்படுமாயின் அவை தொடர்பில் உரிய நடவடிக்கை எடுத்தல் ஆகியவற்றுக்காக நியாயமான உறுதிப்பாடொன்றை பெற்றுக்கொள்ள போதியளவான “சிறப்பான முறையில் திட்டமிடப்பட்ட” உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு கட்டமைப்பொன்றினை நிறுவனத்தினால் நடாத்திச் செல்லப்படல் அவசியமானதாகும்.

### 1.5.2 கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சர்வதேச புகையிலை எதிர்ப்பு தினத்தின் கருப்பொருளில் கொடி நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் திரட்டப்படும் நிதியில் முறையே 90 சதவீதம், 8 சதவீதம் மற்றும் 2 சதவீதம் என பிராந்திய அமைப்புகள், நிதியத்திற்கு மற்றும் | கொடி நிதியத்தின் 90 சதவீதம் பிராந்திய அமைப்புகள் மற்றும் சமூக அடிப்படையிலான அமைப்புகளின் கணக்குகளில் பராமரிக்கப்படுகிறது. ஒவ்வொரு கணக்கையும் அந்தந்த பிராந்திய அமைப்புகளின் சமூக | குறிக்கோள்கள் நிமயத்திற்கமைய சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மாவட்ட அமைப்புகளுக்கு செலவு வைக்கப்படுகிறது. அதன்படி, நிதியத்தினால் 8 சதவீத பங்களிப்புடன் திரட்டப்பட்ட நிதியத்திற்காகவே நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுகின்றது. இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 1 இன் 150 ஆம் பந்தியின் படி, நிதிக்கூற்றுக்களுடன் நிதியத்தின் செயல்பாடுகளின் தன்மை, அதன் முக்கிய செயல்பாடுகள் தொடர்பான விபரங்கள் மற்றும் அதன் செயல்பாடுகளை நிர்வகிக்கும் பிரமாணக்குறிப்பு உள்ளடங்களாக நிதியத்தின் பணிகள் தொடர்பான தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டிராததுடன், கொடி நிதியத்திள் நோக்கங்கள் மற்றும் செயல்பாடுகள் நிதிக்கூற்றுக்களில் சேர்க்கப்பட்டுள்ளன. | உறுப்பினர்கள் அடங்கிய நிர்வாகக் குழு மூலமாகவும் திணைக்களத்தின் 8 சதவீத பங்களிப்பு நிதியத்தின் செயல்பாடுகள பணிப்பாளர் சபையின் மற்றும் அமைச்சின் செயலாளரால் ஆண்டுதோறும் அங்கீகரிக்கப்பட்ட திட்டத்தின்படி மேற்கொள்ளப்படும். | |
| (ஆ) | நிதியத்தின் புதிய பிரமாணக் கோவையின் பிரகாரம், முக்கிய வருமானமாக கருதப்படும் சமுர்த்தி சமூக அடிப்படையிலான அமைப்புகள் மற்றும் பிராந்திய அமைப்புகளின் பதிவுக் கட்டணங்கள் 2022 செப்டம்பர் 05 ஆந் திகதி முதல் திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதன்படி, மீளாய்வாண்டில், கணக்குகளில் பதிவு செய்யப்படாமல் ரூபா 9,044,700 பதிவுக் கட்டணங்கள் நேரடியாக திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டுள்ளதுடன், நிதிக்கூற்றுக்களில் பதிவுக் கட்டண வருமானத்தினை கணக்கு வைக்கும் கொள்கைளில் ஏற்பட்ட மாற்றம் தொடர்பில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | பதிவுக் கட்டணங்கள் மூலம் சமூக அபிவிருத்தி நிதியத்திற்கு எந்த வருமானமும் செலவு வைக்கப்படாததால், அது வருமானமாக அங்கீகரிக்கப்படவில்லை என்பது. | நிதியத்தின் வருமானங்கள் சரியாக அடையாளம் காணப்பட்டு சரியாகக் கணக்கிடப்பட வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டின் ரூபா 373,892 தொகையான எழுதுகருவி செலவினத்தினுள் 2023 ஆம் ஆண்டுக்குரிய எழுதுகருவி செலவினம் ரூபா 100,000 கணக்கு வைக்கப்பட்ட காரணத்தலால், மீளாய்வாண்டின் எழுதுகருவி செலவினம் அந்த அளவினால் அதிகரித்தும், மிகை அந்த அளவினால் குறைத்தும் காண்பிக்கப்பட்டிருந்தது. | எதிர்வரும் கணக்கு பதிவுகளில் திருத்தப்படும் என்பது. | செலவினங்கள் சரியாக கணக்கு வைக்கப்பட வேண்டும். |

**1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணக்கமின்மைகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் 381(1) | திறைசேரியின் அங்கீகாரமின்றி 2017 ஆம் ஆண்டு முதல் அறிக்கையின் திகதி வரையிலும் திணைக்களத்தினால் நடைமுறைக் கணக்கொன்று பேணிச் செல்லப்பட்டிருந்தது. | திறைசேரியின் ஒற்றைக் கணக்கு முறையின் கீழ் சமுர்த்தி தேசிய சமூக அபிவிருத்தி நிதியத்திற்கான அதிகாரப்பூர்வ வங்கிக் கணக்குகளைத் திறக்குமாறு திறைசேரி செயல்பாட்டுத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திடம் அமைச்சின் செயலாளர் கோரிக்கை விடுத்துள்ளார், ஆனால் இதுவரை அதற்கான அங்கீகாரம் வழங்கப்படவில்லை என்பது. | திறைசேரியின் அங்கீகாரத்தினை பெற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 01/2020 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கை மூலம் திருத்தப்பட்ட நிதிப்பிரமாணம் | | | |
| | (i) 876(இ) | பணிகளை நிறைவு செய்துள்ள நிதியங்களில் செலுத்துவதற்குள்ள பணம் மற்றும் ஏனைய பொறுப்புகள் தீர்க்கப்பட்ட பின்னர் எஞ்சும் பணத்தை திரண்ட நிதியத்திற்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும், தற்போது செயற்படும் நிதியத்திறக சொந்தமான முக்கியமான வருமானமான சமூக அடிப்படை அமைப்புகளின் பதிவுக் கட்டண வருமானத்தில் 2022, 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளில் முறையே, ரூபா 6,000,000, ரூபா 9,231,500 மற்றும் ரூபா 9,044,700 திரண்ட நிதியத்திற்கு மாற்றப்பட்டிருந்தது. | நிதியத்தின் பிரதம நிறைவேற்று உத்தியோகத்தரான தலைமை கணக்காளரால் வழங்கப்பட்ட எழுத்துப்பூர்வ அறிவுறுத்தல்களின்படி, 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளுக்கான பதிவுக் கட்டணங்கள் சமுர்த்தி தேசிய சமூக அபிவிருத்தி நிதியிலிருந்து நேரடியாக திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டன. 2024 ஆம் ஆண்டிற்கான சமூக அடிப்படையிலான மற்றும் பிராந்திய அமைப்புகளின் பதிவுக் கட்டணங்களை பிராந்திய மட்டத்தில் அரசாங்க திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) 877(1)(இ) | மீளாய்வாண்டில் வரவு செலவுத் திட்ட ஆவணம் அமைச்சின் செயலாளரின் அங்கீகாரத்துடன் திறைசேரியின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ள தேசிய வரவு செலவுத் திட்ட பணிப்பாளர் நாயகத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டு, அதன் பிரதியை அரச நிதிப் பணிப்பாளர் நாயகத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும் எனினும் அதற்கமைய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் திணைக்கள கணக்குப் பிரிவு மூலம் அங்கீகாரத்திற்காக அனுப்பப்பட்டுள்ளது. | -மேற்படி- |
| (iii) 877(2)(ஈ) | கணக்காண்டு நிறைவடைந்து 2 மாதங்களினுள் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களுடன் செயலாற்றல் அறிக்கையொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், நிதிககூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட்ட எந்தவொரு ஆண்டுக்காகவும் செயலாற்றல் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் செயலாற்றல் அறிக்கையை தயாரிப்பதற்கு குறித்து வைத்துக்கொள்ளப்பட்டது என்பது. | -மேற்படி- |

**1.7 நிதி முகாமைத்துவம்**

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| சர்வதேச புகையிலை எதிர்ப்பு தினமான மே 31 ஆம் திகதியுடன் இணைந்ததாக செயல்படுத்தப்படும் கொடிகள் மற்றும் ஸ்டிக்கர்கள் விற்பனையிலிருந்து சமுர்த்தி பயனாளிகள் மற்றும் சமூகத்திற்கு கிடைக்கும் வருமானத்தில் 8 சதவீதம் தேசிய சமூக அபிவிருத்தி நிதியத்திற்கு செலவு வைக்கப்படுகிறது, மேலும் நிதியத்தின் முக்கிய நோக்கம் அந்தப் பணத்தை அந்தப் பகுதியில் உள்ள சமுர்த்தி பயனாளிகளின் சமூக நலனுக்காகச் செலவிடுவதாகும். அதன்படி, கொடிகள் விற்பனையிலிருந்து கிடைக்கும் வருமானத்தில் அதிகபட்சமாக 90 சதவீதம் அங்கீகரிக்கப்பட்ட செயற்திட்டங்களுக்குச் செலவிடப்பட வேண்டும். மீளாய்வாண்டில் கொடி | மீளாய்வாண்டில் இரண்டு தேசிய தேர்தல்கள் அறிவிக்கப்பட்டதால், அரச நிறுவனங்களின் செயல்பாடுகள் சில வரையறைகளுக்கு உட்பட்டு மேற்கொள்ளப்பட வேண்டியிருந்தது. சமூகத்தை மையமாகக் கொண்ட திட்டங்கள் சமூக அடிப்படையிலான அமைப்புகள் மற்றும் பிராந்திய அமைப்புகள் மூலம் செயல்படுத்தப்படுவதால், தேர்தல் ஆணையரின் சுற்றறிக்கை EC/EDR/PRE/2024/6-04B இலக்கமுடைய மற்றும் 2024.07.26 ஆந் திகதிய சுற்றறிக்கை எண். 05 ஆகியவை மூலம் அவ்வாறான நிகழ்ச்சித்திட்டம் செயல்படுத்தப்படாது என்று | நிதியத்தின் செயல்பாடுகளை நிறைவேற்ற நிதியம் ஆக்கபூர்வமாக பயன்படுத்தப்பட வேண்டும். |

நிகழ்ச்சித் திட்டங்களிலிருந்து கிடைத்த மொத்த வருமானம் ரூபா 169,725,587 ஆகும், அதில் 10 சதவீதம் சமூக அடிப்படையிலான அமைப்புகளால் நிதியத்திற்கு அனுப்பப்பட்டது. மீதமுள்ள 90 சதவீதத்தில், அதாவது ரூபா 152,753,028 தொகையில் ரூபா 126,860,000 மட்டுமே 5 சமூகத் நிகழ்ச்சித் திட்டங்களுக்கு செலவிடப்பட்டது. கொடி வருமானத்திற்கு ஒப்பாக அதிகபட்ச அளவிற்கு நிகழ்ச்சித் திட்டங்களை செயல்படுத்தவில்லை என்பதுடன், 8 மாவட்டங்களில் எந்த செயற்திட்டமும் செயல்படுத்தப்படவில்லை. மேலும், 5 மாவட்டங்களில் சமூகத் திட்டங்களை செயல்படுத்துவதற்காக ரூபா 310,000 செலவிடப்பட்டிருந்தது. அதன்படி, மீளாய்வாண்டில் கொடி வருமானத்திலிருந்து பெறப்பட்ட பணம் செயல்படுத்த திட்டமிடப்பட்ட நிதியத்தின் செயல்பாடுகளுக்கு திறம்பட பயன்படுத்தப்படவில்லை என்பதுடன், மீதமுள்ள தொகையான ரூபா 25,893,028 செயலற்ற நிலையில் உள்ளதா என்பது குறித்து நிதியத்தின் முகாமைத்துவத்தினால் பின்தொடர்தல் நடத்தப்படவில்லை. மேலும், பிராந்திய சமூக அடிப்படையிலான அமைப்புகளால் பெறப்பட்ட கொடி வருமானம் மற்றும் அந்த அமைப்புகளின் நிதிய மீதிகள் பற்றிய துல்லியமான தகவல்கள் நிதியத்திடம் காணப்படவில்லை.

தெரிவித்துள்ளன. எனவே, மீளாய்வாண்டில் 90% சதவீதமான கொடி வருமானம் குறைவான விகிதம் செலவிடப்பட்டது என்பது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 12,571,739 ஆன மிகையொன்றாக காணப்பட்டதுடன், அதனோடு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 7,938,883 தொகை ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 20,510,622 ஆன வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பிற்கு நிதியத்தின் செலவினங்கள் குறைவடைந்தமை முக்கியமான காரணமாக அமைந்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை சமுர்த்தி அதிகாரசபையின் 178 ஆவது பணிப்பாளர் சபைக் கூட்டத்தின் பதவிநிலை அறிக்கை இலக்கம் 05/2009 மூலம் வழங்கப்பட்ட ஒப்புதலின் கீழ் நிறுவப்பட்ட நிதியத்தில் புதிய பிரமாணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 16 நோக்கங்களிடையே பின்வரும் நோக்கங்கள் அடைய கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | ஒவ்வொரு சமூக அடிப்படையிலான மற்றும் பிராந்திய அமைப்புகளினால் குறிப்பிடப்பட்டுள்ள 16 நோக்கங்களிலிருந்து தேவை மற்றும் முன்னுரிமைக்கு ஏற்ப திட்டங்களைத் தேர்ந்தெடுத்தல் மற்றும் அங்கீகாரம் வழங்குதல் அந்தந்த சமூக அடிப்படையிலான அமைப்புகளின் நிறைவேற்றுச் சபையால் மேற்கொள்ளப்படுகின்றது. நிதியத்தில் காணப்படும் நிதியின் அளவு உறுப்பினர்களின் கோரிக்கைகள் மற்றும் உற்பத்தித்திறனைப் பொறுத்தும், அந்தந்த பகுதிகளுக்கு ஏற்பவும் மாறுபடும் என்பதால், இந்த நிலைமை அனைத்து நோக்கங்களையும் பூர்த்தி செய்யக்கூடிய திட்டங்களை செயல்படுத்த வழிவகுத்தது. | நிதியின் நோக்கங்களை அடைய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| | (i) பாடசாலைக்கு செல்லும் வயதுடைய குழந்தைகளைப் பாடசாலைக்கு அனுப்புவது தொடர்பான மனப்பான்மையில் மாற்றத்தை உருவாக்குதல், ஆனால் பொருளாதார மற்றும் சமூகப் பிரச்சினைகள் காரணமாகப் பள்ளிக்குச் செல்லாத நிலையில், தேவைப்படும்போது நிதி உதவி வழங்குதல். | | |
| | (ii) சமூகத்தில் பல்வேறு பாதகமான சூழ்நிலைகளை எதிர்கொண்டு உதவியற்ற நிலையில் வீடற்ற குடும்பங்களுக்கு வீடுகளை நிர்மாணித்தல். | | |
| | (iii) மிகவும் ஏழ்மையான மற்றும் பொருளாதார ரீதியாக அதிகாரம் பெற | | |

முடியாத குடும்பங்களைக் கண்டறிந்து அவர்களுக்கு நிவாரணம் வழங்குதல்.

(iv) சமூகத்தில் பல்வேறு பாதகமான சூழ்நிலைகளை எதிர்கொண்டு குறைந்த வருமானம் ஈட்டுபவர்கள் எதிர்கொள்ளும் எந்தவொரு பிரச்சனையான சூழ்நிலையிலும் அவர்களுக்குத் தேவையான உதவிகளை நிவாரணங்களை வழங்குதல்.

(v) அவர்களின் சமூக உரிமைகளைப் பாதுகாப்பதன் மூலம் குழந்தைகள், பெண்கள் மற்றும் முதியவர்களின் முன்னேற்றத்திற்காக பாடுபடுதல்.

(vi) சமூக அபிவிருத்தி மன்றத்தின் நிதியத்தின் நிகழ்ச்சித் திட்டங்களை மிகவும் பயனுள்ள மற்றும் வெளிப்படையான முறையில் செயல்படுத்துதல்.

(vii) சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தால் நிர்வகிக்கப்படும் நிகழ்ச்சித் திட்டங்களை சரியான நேரத்தில் மற்றும் பொருத்தமான முறையில் செயல்படுத்துதல்.

(viii) அனைவருக்கும் ஆரோக்கியமான மற்றும் இனிமையான சூழலை உருவாக்குதல் மற்றும் மதிப்புகள் நிறைந்த ஒரு வளமான சமூகத்தை உருவாக்குதல்.

(ix) பொருளாதார ரீதியாக பயனுள்ள வாழ்வாதார செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | நிதியத்தின் பிரமாணத்திற்காக திறைசேரியின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிராததுடன், நிதியத்திலிருந்து மேற்கொள்ளக்கூடிய கொடுப்பனவுகள் மற்றும் பயன்பாடு தொடர்பில் தகவல்கள் பிரமாணத்தில் உள்ளடக்கப்படவில்லை. | நிதியம் தொடர்பாக திறைசேரியுடன் கலந்துரையாடல்கள் நடைபெற்று வருவதுடன், அங்கு எடுக்கப்பட்ட தீர்மானங்களின் அடிப்படையில் சட்டமா அதிபரின அறிவுரைக்காக அனுப்பப்பட்டுள்ளது. அந்த தீர்மானத்தின் பிரகாரம் எதிர்கால பணிகள் மேற்கொள்ளப்படும் என்பது. | பிரமாணம் சரியாக தயாரிக்கப்பட்டு திறைசேரியின் அங்கீகாரம் பெறப்பட வேண்டும். |
| (இ) | திணைக்களத்தின் கீழுள்ள அனைத்து நிதியங்களினதும் கணக்காய்வு, கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் ஊடாக மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், நிதியத்தின் நிதிக்கூற்றுக்கள் திணைக்களத்தின் கணக்காய்வு அலகின் ஊடாக கணக்காய்வுக்கு உட்படுத்தப்பட வேண்டியதாக பிரமாணத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது. | அமை/25/0630/820/008 ஆம் இலக்கமுடைய மற்றும் 2025 மே 20 ஆந் திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் சமுர்த்தி சமூக அடிப்படை வங்கிகள் மற்றும் சமுர்த்தி சமூக அடிப்படை வங்கி சங்கங்கள் ஆகியவற்றை அரச கணக்காய்வுக்கு உட்படுத்துவதற்கு 2017 இன் 02 ஆம் இலக்க திவிநெகும (திருத்தப்பட்ட) சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ள அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. அந்த அங்கீகாரத்தின் அடிப்படையில் மேலதிக நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | பிரமாணம் சரியாக திருத்தப்பட வேண்டும். |

### 3.2 நிதியத்தின் குறைப்பயன்பாடு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதியத்தின் 2024 ஆம் ஆண்டு திருத்தப்பட்ட செயல்நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம் 19 நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்குரிய நிதியேற்பாடு ரூபா 53,700,000 ஆகும். எனினும், அந்த நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயற்பாடுகளிடையே ரூபா 8,078,000 செலவிடப்பட்டு 07 நிர்வாக ரீதியான செயற்பாடுகள் மற்றும் ஒரு நிகழ்ச்சித்திட்டம் மாத்திரம் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தது. அதற்கமைய மீளாய்வாண்டினுள் நிதியேற்பாடுகளில் 15 சதவீதம் மாத்திரம் நிதியத்தினால் பயன்படுத்தப்பட்டிருந்தது. | தேர்தல்கள் ஆணையாளரின் EC/EDR/PRE/2024/6-04B இலக்கமுடைய மற்றும் 2024 ஜூலை 26 ஆந் திகதிய சுற்றறிக்கை இலக்கம் 05 இன் மூலம் செயல் நடவடிக்கை திட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களில், பிரஜா ஹரசர நிகழ்ச்சித்திட்டம், சமுர்த்தியென் பலகென்வு அபி எனும் நூல், அச்சிடுதல், சமுர்த்தி Talent Show, தாருண்யட சொந்துர எமத்துமக் எனும் விளையாட்டு நிகழ்ச்சித் திட்டம் போன்ற சமூகத்தை நேரடியாக ஈடுபடுத்துவதன் மூலம் செயல்படுத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் சமுர்த்தி சமூக கல்வி வளாகத்தினை தயாரிக்கும் காணியை சுவீகரிப்பதில் உள்ள சிக்கல் காரணமாக செயற்படுத்த முடியாது உள்ளமை. | நிதியத்தின் செயல்பாடுகளை நிறைவேற்ற நிதியை திறம்பட பயன்படுத்த வேண்டும். |